**தலைப்பு 151 – கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 151 – கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஜனவரி 05 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 4001.65 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 3257.16 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 744.49 மில்லியன் அதாவது 18.60 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டுவருவன | 1,321.65 | 1,305.87 | 15.78 | 1.19 |
| மூலதனம் | 2,680.00 | 1,951.29 | 728.71 | 27.19 |
| மொத்தம் | **4,001.65** | **3,257.16** | **744.49** | **18.60** |

2.3 **முற்பணக் கணக்கு**

2.3.1 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய 15101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடி யானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடி யானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடி யானது** |
| **ரூபா.மில்லி யன்** | **ரூபா.மில்லி யன்** | **ரூபா.மில்லி யன்** | **ரூபா.மில்லி யன்** | **ரூபா.மில்லி யன்** | **ரூபா.மில்லி யன்** |
| 3.00 | 3.00 | 2.20 | 5.48 | 30.00 | 20.05 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் கீழ் காணப்படும் காணப்பட்ட இலக்கம் 7002/0000/00/0089/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 15.13 மில்லியனாக இருந்தது.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழ் காணப்படும் பின்வரும் 04 பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 90.16 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **வைப்புக் கணக்குகளின் இலக்கம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0012/0073/000 | 1.01 |
| 6000/0000/00/0013/0040/000 | 0.49 |
| 6000/0000/00/0051/0051/000 | 59.57 |
| 6000/0000/00/0016/0021/000 | 29.09 |
| மொத்தம் | **90.16** |

**2.5 கணக்காய்வு அவதானிப்பு**

கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்களும்

### 3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

அமைச்சினால் கீழ் காணப்படுகின்ற கணனிகள், துணைக் கருவிகள், மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன், ஏனைய பதிவேடுகள் முறைப்படி நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | கணனிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 நவம்பர் 19 அந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iii) | வாகனப் பட்டியல் | நிதிப் பிரமாணங்கள் 1647(உ) |

### 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்

மீளாய்வாண்டின் போது அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 06 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2016 ஜூன் 30 திகதி வரையும் பதில் அனுப்பியிருக்கவில்லை. அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 33,503,315 தொகையாக இருந்தது.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சினால் 2016 ஏப்ரல் 30 திகதி வரை தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 10,827,954 தொகையாக இருந்தது. முன்னைய ஆண்டுகளின் கட்டுநிதிக் கணக்குக் கணக்குகளின் தீர்க்கப்படாதிருந்த மீதிகள் மீளாய்வாண்டிற்காக கட்டுநிதிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கட்டுநிதி மீதியில் 2010 ஆம் ஆண்டிற்கான தீர்க்கப்படாதிருந்த மீதி ரூபா 8 மில்லியன் ஆகக் காணப்பட்டது. அதே போல் 2014 ஆண்டு முதல் காணப்பட்டு வரும் ரூபா 1.73 மில்லியனுக்கான கடன் 03 வைப்பு மீதிகளும் அம் மீதியில் காணப்பட்டது.

### 3.4 பொது வைப்புக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மீதியில் இருந்த அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் பேரில் எழுதியிருந்த ரூபா 10.52 மில்லியனுக்கான காசோலை ஒன்று மீளாய்வாண்டின் போது இரத்துச் செய்து பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சின் கீழ் செயற்பட்ட கரையோர மறுசீரமைப்பு மற்றும் மூலவள முகாமைத்துவத்தின் பின்னரான நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சுனாமியின் பின்னரான வாழ்வாதார உதவி ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம் ஆகிய இரண்டு செயற்திட்டங்களும் 2014 மார்ச் 31 திகதி அளவில் முடிவடைந்திருந்தது. எனினும் அந்த செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 791,731 இற்கான மீதியொன்று 2015 திசெம்பர் 31 வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்கான இணக்கக் கூற்று**

விடய இலக்கம் 15101 கொண்ட அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்றுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடன் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 1,371,368 ஆகக் காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதி 1 வருடம் முதல் 30 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் அவற்றை அறவீடு செய்வதற்கு அமைச்சுக்கு முடியாதிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளில் கடமையாற்றுவதற்காக நிரந்தரமாக விடுவிக்கப்பட்டிருந்த 04 அங்கத்தவர்களின் கூட்டுத்தொகை ரூபா 93,006 இற்கான கடன் மீதியுடன் தொடர்புடைய கடன் தவணைகள் 2011 ஆண்டு முதல் அறவீடு செய்திருக்கவில்லை. அந்த உத்தியோகத்தர்களின் தற்போதைய சேவை நிலைமையை பற்றி ஆராய்ந்து அந்த கடன் மீதிகளைத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

(அ) அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் 02 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2015 ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது பரிசோதனை மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த 33 கணக்காய்வு செயற்பாடுகளில் 28 கணக்காய்வு செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சுக்கு சொந்தமான ரூபா 1,065,000 பெறுமதியான 03 வாகனங்கள் 01 வருட காலம் முதல் 03 வருடம் வரையான காலவீச்சு முதல் விளைவற்றும் மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் காணப்பட்டது.

(ii) அமைச்சில் இருந்து சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக வருகின்ற பொதுமக்களுக்கு பார்வையிடுவதற்காக தரை மாடியில் பொருத்துவதற்காக 2014 திசெம்பர் 30 திகதி ரூபா 108,020 தொகை செலவிடப்பட்டு தொலைக்காட்சி பெட்டி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை அத் தொலைக்காட்சி பெட்டியை பொறுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருட்கள் மெய்மையாய்தல் நடாத்துதல்**

2015 ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் மெய்மையாய்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 வருடாந்த மெய்மையாய்தல் நடாத்தி அதன் அறிக்கை 2016 மார்ச் 17 திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அமைச்சின் 05 பிரிவுகளின் அறிக்கைகள் குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மேலும் 04 பிரிவுகளில் அறிக்கைகள் கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஆகஸ்ட் 15 திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) 2013 ஆண்டிற்காக சமர்ப்பித்திருந்த மெய்மையாய்தல் சபை அறிக்கையில் அடங்கியிருந்த 50 சொத்து விடயங்களுக்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்காக ரூபா 1,214,883 தொகை பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அச் சொத்துக்கள் அமைச்சுக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை என மெய்மையாய்தல் சபை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. கடந்த ஆண்டின் போதும் அச் சொத்துக்களை மெய்மையாய்தலுக்கு ஆளாக்கியிருக்கவில்லை.

(iii) கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த 4 பிரிவுகளைச் சேர்ந்த மெய்மையாய்தல் சபை அறிக்கைகளின் படி மீதி மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.

(iv) 2015 ஆண்டிற்கான மெய்மையாய்தல் சபை அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த 30 பண்ட அலகுகளின் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2015 ஆண்டிற்கான அமைச்சின் 151-1-1-0-2003 கொண்ட செலவு விடயத்திற்காக நிதியேற்பாடுகளை மேற்கொள்ளாதிருந்த போதிலும், வருட இறுதி வரை அச்செலவு விடயம் தொடர்பாக ரூபா 300,663 இற்கான பொறுப்புக்களும் ஏற்பட்டிருந்தது.

## 3.8 இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா. | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப் பிரமாணம் 487(3) | 1,009,156 | எதிர்ப்பாரா செலவு நிதியத்தில் இருந்து பெற்றிருந்த முற்பணங்களில் இருந்து செலவிடப்படாத மீதியாகக் காணப்படும் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 755 | - | அமைச்சின் செய்திப் பிரிவு மூடப்பட்டிருந்த போதிலும் அதில் காணப்பட்ட சொத்துக்கள் அமைச்சுக்கு ஒப்படைப்பதற்காக ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக அச் சொத்துக்களின் உரிமை மற்றும் பாதுகாப்புத் தன்மை என்பன உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3.9 வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள்

### 3.9.1 இலங்கை கண்டத் தடாகத்தின் வெளி எல்லையினை தீர்மானிக்கும் செயற்திட்டம்

அமைச்சின் கீழ் செயற்பட்டு அமைச்சரவை தீர்மானத்தின் படி 2012 திசெம்பர் 31 திகதி முதல் செயற்திட்ட விடயங்கள் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தினால் கடல்சார் மைல்களுக்கு அப்பால் காணப்படும் கண்டத் தடாகத்திற்கான விண்ணப்பித்தல், உரித்தாக்கல், அதற்காக அவற்றின் வளங்களை இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக பயன்படுத்துதல் என்பவற்றை குறிக்கோளாகக் கொண்டிருந்த போதிலும், அக் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அப்பொறுப்புக்களைப் பூர்த்தி செய்வதற்காக 2012 ஏப்ரல் 09 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பலவித விடயத்துறைகளில் தேர்ச்சியாளர்கள் 11 பேரை அடங்கிய நொஎக் எனப்படும் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கண்ட எல்லையின் வெளி எல்லை பற்றி உரிமைகோரும் இலங்கையின் விண்ணப்பம் 2025 ஆண்டின் போது ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவின் முன்னால் கலந்துரையாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த சந்தர்ப்பம் வரை இலங்கையின் உரிமை தொடர்பான விடயங்களை சமர்ப்பிப்பதற்காக தேவையான கட்டங்களை எடுத்தல் மற்றும் சமுத்திர மூலவளங்கள் மற்றும் சமுத்திர விடயங்களை கண்டுபிடித்தல் மற்றும் பயன்படுத்தல் தொடர்பான கொள்கைகள் தயாரித்தலும் இக்குழுவின் பொறுப்புகளில் உட்படுத்தப்பட்டிருந்தது. இக் குழுவினை செயற்படு விதமாக நடத்துவதற்காக செயற்பட வேண்டிய 3 நிறுவனங்களின் இடையே கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு ஒரு நிறுவனமாக இருந்தது. எனினும் குழுவின் செயற்பாடுகளை நடத்துவதற்காக மற்றும் அதற்காக பிரதிநிதி ஒருவரை நியமனம் செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.9.2 செயற்திட்ட கணக்குகளில் காணப்பட்ட காசு மீதிகள்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் சுனாமியின் பின்னர் புனர்நிர்மாணம் மற்றும் மூளவள முகாமைத்துவ செயற்திட்டத்திற்கு உரிய கூட்டுத்தொகை ரூபா 4,499,791 தொகையான மீதியும், 2009 ஜுன் 30 ஆந் திகதி முடிவடைந்த கடற்கரை மூலவள முகாமைத்துவச் செயற்திட்டத்தைச் சேர்ந்த வங்கிக் கணக்கொன்றில் ரூபா 28,618 தொகை மீதியொன்றும் 2015 திசெம்பர் 31 திகதி வரை காணப்பட்டதுடன் அம் மீதிப் பணத்தை திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வங்கிக் கணக்குகளை மூடிவிடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**3.10 உள்நாட்டு நிதியளித்தல் மூலம் செயற்திட்டங்கள் அமுல் நடத்துதல்**

**3.10.1 கடற்தொழில் துறைமுகம் மற்றும் நங்கூரத் துறை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்**

2013 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த கடற்தொழில் துறைமுகம் மற்றும் நங்கூரத்துறை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் இடைக்கால பாதீட்டுச் சட்டகத்தின் கீழ் 2015-2017 காலப்பகுதிகளில் செயற்படுத்துவதற்காக திறைசேரி விதப்புரைந்திருந்தது. அதற்காக ரூபா 5,300 மில்லியன் நிதியேற்பாடுகளை வழங்கவும் இணங்கியிருந்தது. செயற்திட்டதை அமுல் நடத்துதல் மற்றும் கண்காணிக்கும் அலகினை வலுப்படுத்துவதற்கும், செயற்படு நிலையில் காணப்படும் 6 துறைமுக செயற்திட்டங்களைத் தவிர 7 செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கும், வழங்கியிருந்த ஒப்பந்த வேலைகளை அதேவாறு செயற்படுத்துதல் மற்றும் அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எதிர்வரும் செயற்திட்டங்களை அமுல் நடத்துவதற்கும் 2015 நவம்பர் 06 திகதி அமைச்சரவை தீர்மானித்திருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டம் 2017 ஆண்டில் பூர்த்தி செய்வதற்காக அதனது கால நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. அந்த காலத்தை அடக்கக் கூடிய விதமாக செயற்திட்ட திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆண்டின் போது செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் வழங்கியிருந்த அங்கீகாரத்தின் பிரகாரம் 2015 இறுதியளவில் நிர்மாண வேலை விடயங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. செயற்படு நிலையில் காணப்பட்ட 06 செயற்திட்டங்கள் தொடர்பாக அதனது முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

(i) காலி துறைமுகத்தில் புதிய இறங்குதுறை வடிவமைத்து நிர்மாணிக்கும் வேலை விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கலமெடிய கடற்தொழில் துறைமுக நிர்மாண வேலைகள் 2015 ஆண்டு இறுதியளவில் அதனது பௌதீகச் செயலாற்றுகை 36 சதவீதமாகக் காணப்பட்டது. ஹம்பாந்தோட்டை கடற்தொழில் துறைமுகத்தின் தற்போது காணப்படும் அலை தாங்கியை நீடித்தல், பலகைத்துறை போருதொட்ட தரை இறக்கு நிலையத்தின் அலை தாங்கியை நீடித்தல் ஆகிய விடயங்களின் பௌதீக செயலாற்றுகை 50 சதவீதம் ஆகக் காணப்பட்டது.

(iii) 2015 ஆண்டு இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய கைகாவல நங்கூரத் தளம் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதனது பௌதீக முன்னேற்றம் நூற்றிற்கு 2 ஆகவும் மற்றும் நிதி முன்னேற்றம் ரூபா 84.84 மில்லியன் ஆகியிருந்தது. எனினும் கரையோரம் பேணல் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றிருக்காமையால் செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலவிடப்பட்டிருந்த ரூபா 84.84 மில்லியன் தொகை பலனற்ற செலவாக மாறியிருந்தது.

(iv) மருதானை நங்கூரத் தள நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக கரையோரம் பேணல் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக அதனால் ஏற்படும் சுற்றாடல் சார் தாக்கங்களைத் தீர்மானிப்பதற்கு முடியாமல் இருந்தது.

(இ) 2014 ஆண்டிற்கான பாதீட்டு பிரேரணைகளின் பிரகாரம் 2016 ஆண்டின் போது பூர்த்தி செய்ய வேண்டிய கரைநகர் வள்ள தளம் நிர்மாணித்தல், வென்னப்புவ, தொடந்துவ கடற்தொழில் துறைமுகங்கள் மற்றும் பேரலிய நங்கூரத் தளம் ஆகிய நிர்மாண வேலை மற்றும் நீர்கொழும்பு சிறுகடல் அபிவிருத்தி செய்தல் ஆகிய விடங்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி முன்னேற்றம் ரூபா 22.63 மில்லியன் ஆகக் காணப்பட்ட போதிலும் பௌதீக செயலாற்றுகை 0 சதவீதமாகும்.

(ஈ) கந்தரை, குருநகர் மற்றும் சிலாவத்துறை பகுதிகளில் கடற்தொழில் வசதிகளை, அபிவிருத்தி செய்வதற்காக வரைபுகள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் ஆகிய விடயங்கள் கம்பனி ஒன்றின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆரம்ப ஆய்விற்கான ஒப்பந்தம் ஒப்படைக்கும் போது முன்னர் இணங்கியிருந்த நிரந்தர கட்டணத்திற்கு விடயம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஆய்வு வேலைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 18,221 மில்லியனுக்கான மதிப்பீட்டில் சதவீதமான பெறுமதியாக ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்திருந்த ரூபா 159 மில்லியனுக்கான கட்டணத்தை பெறுகைகள் குழு அங்கீகரித்திருந்தது.

(ii) ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்திருந்த திட்டமிடல் மற்றும் மதிப்பீடு, குழுவினால் பரிசோதனை மேற்கொண்ட பின்னர் திருத்தப்பட்ட செயற்திட்டக் கிரயம் ரூபா 12,045 மில்லியன் என கணக்கிடப்பட்டிருந்தது. அக் கணக்கிடப்பட்ட கிரயத்துடன் தொடர்புடைய ஒப்பந்தக்காரரின் உசாத்துணை கட்டணத்தின் 70 சதவீதம் எனப்படும் ரூபா 8.56 மில்லியன் (பெறுமதி கூட்டிய வரி உட்பட) ஒப்பந்தக்காரரும் செலுத்தியிருந்தது. அத் திருத்திய கட்டணத்தை மற்றும் திட்டமிடல் மற்றும் பெறுகைகள் குழு அங்கீகரித்திருக்கவில்லை.

(iii) குருநகர் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக குறிப்பிட்ட ஆய்வு அறிக்கை தொடர்பாக மொரட்டுவைப் பல்கலைக்கழக சிவில் பொறியியலாளர் திணைக்களத்தினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம் அதன் கிரயம் ரூபா 2,432.2 மில்லியன் தொகை எனினும் செயற்திட்டத்தின் கிரயம் என ரூபா 2,520.9 மில்லியன் தொகை எனக் கணித்து ஒப்பந்தக்காரரின் உசாத்துணைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 590,884 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) ஒப்பந்தக்காரருக்கு கட்டணம் செலுத்தும் போது எதிர்ப்பாராத மற்றும் கூறுவிலைகள் வித்தியாசப்படல் தொடர்பாக ஏற்படக் கூடிய கிரயத்தையும் அடக்கக் கூடிய மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்ட உசாத்துணைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளமையால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய நிச்சயமற்ற கிரயத்திற்காக ரூபா 8,146,246 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(v) உரிய ஆரம்ப ஆய்வு அறிக்கையை பெற்ற பின்னர் கந்தர மற்றும் சிலாவத்துறை துறைமுகங்களின் நிர்மாண வேலைக் கைவிடப்பட்டிருந்தன.

(உ) நீர்கொழும்பு சிறுகடல் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக ரூபா 1,000 மில்லியனுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் ஆரம்ப விடயங்களுக்காக 2014 திசெம்பர் 24 ஆந் திகதி கடற்தொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு ரூபா 5,000,000 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அந்த முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அதனை ஒரு செலவு என கணக்கீடு செய்யப்பட்டு செயற்திட்டம் செயற்படுத்தாமல் கைவிடப்பட்டிருந்தது.

(ஊ) அமைச்சரவையினால் நியமனத்தை பரிந்துரைக்கக் கூடாது என தீர்மானித்திருந்த ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் 2015 ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் 05 மாத காலத்திற்கு செயற்திட்ட பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். ஓய்வு பெற்றவர்களை சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பான சுற்றறிக்கைகளுக்கு முரணாக அச் செயற்திட்ட பணிப்பாளருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 356,313 தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.10.2 திக்ஓவிட கடற்தொழில் துறைமுகச் செயற்திட்டம்**

மீளாய்வாண்டின் போது கடற்தொழில் துறைமுகம் மற்றும் நங்கூரத் துறை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளில் ரூபா 77 மில்லியனுக்கான நிதியேற்பாடு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் திக்ஓவிட துறைமுக செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டு அச் செயற்திட்டத்தை அமுல் நடத்தி அதற்காக ரூபா 68,691,077 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இச் செயற்திட்டத்தின் மூலம் துறைமுக வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஐஸ் இயந்திர அரை தொடர்பாக பற்றுச்சீட்டுக்களை தீர்ப்பதற்கு தாமதித்ததினால் ரூபா 3,279,729 இற்கான வட்டித் தொகையொன்று ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயற்திட்டத்தை பூர்த்தி செய்தமைக்கான சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) ஒப்பந்தக்காரரினால் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து ஒப்படைப்பதற்கு இணங்கியிருந்த திகதிக்கு 134 நாட்கள் தாமதித்த பின்னரே செயற்திட்டத்தை ஒப்படைத்திருந்தார். அமைச்சு ஒப்பந்தக்காரருடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் அத் தாமத காலத்திற்குரிய பற்றுச்சீட்டுக்களின் பெறுமதியில் 6.05 சதவீதம் அதாவது ரூபா 6,509,041 தொகைக்கான தாமதக் கட்டணத்தை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஈ) திக்ஓவிட கடற்தொழில் துறைமுகத்தின் கடமையில் அடங்காத கப்பல்கள் மற்றும் சப்மெரின் ஆக்குவதற்கு பயன்படுத்தும் கணனி மென்பொருள் ஒன்று ரூபா 9,664,584 தொகை செலவிடப்பட்டு 2014 ஏப்ரல் 30 திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த மென்பொருள் அனுமதிப்பத்திரத்திற்காக மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் அதனது செல்லுபடியாகும் காலம் 05 வருடங்களாக இருந்தது. கணக்காய்வுத் திகதிக்கு அதனை கொள்வனவு செய்து 03 வருடங்களும் 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும் எதுவித ஆக்கங்களும் மேற்கொள்ளப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(உ) மேற்கூறிய (ஈ) இல் குறிப்பிட்ட மென்பொருள் 2016 பெப்ரவரி மாதத்தில் அமைச்சின் கீழ் காணப்பட்ட வ/ப சீனோர் சம்மேளனக் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அக் கம்பனியில் கப்பல்கள் மற்றும் சப்மெரின் உற்பத்தி செய்யாமையால் மற்றும் அந்த மென்பொருளைப் பயன்படுத்துவதற்கான தேவையில் பயிற்சியைப் பெற்றிருக்காமை காரணமாக அதன் பயன்பாட்டுத் தன்மை குறைந்திருந்தது. இதன் காரணமாக இதற்காக செலவிடப்பட்ட ரூபா 9.7 மில்லியன் அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டமொன்றென அவதானிக்கப்பட்டது. இந்த மென்பொருள்

கொள்வனவு செய்வதற்காக விதப்புரை வழங்கிய செயற்திட்டத்தின் கடல்சார் திட்ட வரைஞர் 2016 பெப்ரவரி மாதத்தில் செயற்திட்டத்தில் இருந்து விளகியிருந்தார்.

(ஊ) திக்ஓவிட கடற்தொழில் துறைமுக செயற்திட்டத்தின் மூலம் அதனோடு தொடர்பில்லாத வ/ப சீனோர் சம்மேளனத்திற்கு சொந்தமான மட்டக்குளி படகு இயந்திர தளத்தினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 180 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. கடற்தொழில் செய்வோருக்கு சலுகை விலையில் வள்ளங்களைத் திருத்திக் கொடுக்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அமுல் நடத்தப்பட்டு அந்த செலவினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி 2013 மார்ச் 05 திகதி பொதுக் கணக்குகள் குழுக் கூட்டத்தில் கட்டளை இடப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 திகதி வரை அதற்காக திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், கடற்தொழிலாளர்களிடம் இது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது வ/ப சீனோர் சம்மேளத்தினால் சலுகை விலையில் கடற்தொழில் வள்ளங்கள் திருத்தும் வேலைகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) 2014 அக்தோபர் 17 திகதிய 02/2014 ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தினால் 2015 ஆண்டிற்கான பண்டங்கள் மெய்மையாய்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதனது அறிக்கை 2016 மார்ச் 17 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. எனினும் 2016 மார்ச் 30 திகதியளவிலும் பண்டங்களை மெய்மையாய்தல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஏ) 2014 ஆண்டிற்கான பண்டங்கள் மெய்மையாய்தல் அறிக்கை 2015 அக்தோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த பண்டங்கள் மெய்மையாய்தல் அறிக்கை குறிப்பிட்ட தினத்தை விட ஒரு வருடம் தாமதித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ் அறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்த 27 பண்ட வகைகளில் 61 பற்றாக்குறைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 757 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.10.3 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றம் காணப்படாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

**(அ) 02 தாய் வள்ளங்கள் கொள்வனவு செய்தல்**

ஆழ்கடலில் மீன் வளங்களை கண்ணிக் கருவி முறையை பயன்படுத்தி மீன்பிடித்தலும் பல நாள் கடற்றொழில் வள்ளங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதலையும் குறிக்கோளாகக்கொண்டு 02 தாய் வள்ளங்கள், கூட்டுத்தொகை ரூபா 326,016,000 தொகைக்கு கொள்வனவு செய்வதற்காக 2007 ஆண்டின் போது அமைச்சு வெளிநாட்டு வழங்குனர் ஒருவருடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இச் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 40 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டின் போது வழங்குனர் மற்றும் உசாத்துணையாளரினால் வினவிய தகவல்கள் வழங்கப்படாமையால் குறிப்பிட்ட வள்ளங்களை கொள்வனவு செய்தல் நடைபெற்றிருக்காமையால் மீளாய்வாண்டின் போது ஒதுக்கியிருந்த மொத்த நிதியேற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) இந்த கொள்வனவுக்காக 2006 ஆண்டு முதல் தொடர்ச்சியாக நிதியேஏற்பாடுகள் செய்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது குறிப்பிட்ட கொள்வனவுக்காக எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

இதன் காரணமாக 2000 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை திரண்ட செலவு ரூபா 113,556,801 தொகையாக இருந்தது. அம் மொத்தச் செலவும் பலனற்றதாக மாறியிருந்தது.

(iii) 2013 ஆகஸ்ட் 22 திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் ஆக்கபூர்வமாக நிதியங்கள் பயன்படுத்தப்படாமை தொடர்பாக அவற்றிற்காக காரணங்களைச் சமர்ப்பிக்கும் படி செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டு இறுதி வரை பெறுகைகள் செயற்பாடுகளில் முன்னேற்றம் ஒன்றினையும் செயலாளர் அறிவித்திருக்கவில்லை.

**(ஆ) கடற்றொழில் பிரஜைகளை வலுப்படுத்துதல்**

கடற்றொழில் பிரஜைகளை வலுப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 159,366,549 தொகையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 154,616,552 தொகை பயன்படுத்தியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இவ்விடயத்திற்காக ரூபா 58,746,696 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், கடற்தொழிலாளருக்காக கொள்வனவு செய்திருந்த குல்லா கட்டைகள், தோணிகள், பலட்கள் மற்றும் வலைகள் உரிய கடற்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டமை தொடர்பாக உறுதிப்படுத்தப்படவில்லை. இதன் பிரகாரம் செலவீனங்கள் கடற்தொழில் பிரஜைகளை வலுப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டது என உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ii) 2015 ஆண்டின் போது அமைச்சின் அபிவிருத்தித் திட்டத்தில் அடங்கியிருக்காத கடற்தொழிலாளர் ஓய்வூதிய முறைமையில் நிருவாகச் செலவுகளுக்காக ரூபா 15 மில்லியன் விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) குறைந்த வருமானமுடைய கடற்றொழில் பிரஜைகளுக்கு மலகூடங்கள் நிர்மாணிப்பதற்காக உதவி வழங்குதல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடற்றொழில் பிரஜைகளை வலுப்படுத்தலின் கீழ் 14 கடற்தொழில் மாவட்டங்களில் குறைந்த வருமானமுடைய கடற்றொழிலாளர்களுக்கு 645 மலகூடங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 19,080,000 தொகைக்கான நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. 4 மாவட்டங்களுக்காக சுமார் ரூபா 7,005,000 தொகையான உதவிநிதி விடுவிக்கப்பட்டிருந்தது.

(ii) மலகூடங்கள் நிர்மாணித்தல் அல்லது திருத்துதல் தொடர்பான அடிப்படையில் தயாரிப்பு, விடயங்கள் முடிவடைந்த பின்னர் கடற்தொழில் பரிசோதகர் மற்றும் கிராம உத்தியோகத்தரின் விதப்புரையின் மூலம் மற்றும் மாவட்ட வீடமைப்புக் குழுவின் மேற்பார்வை மற்றும் அங்கீகாரத்தின் கீழ் நிர்மாண வேலைக்காக ரூபா 30,000 தொகையும், திருத்த வேலைக்காக ரூபா 15,000 தொகை நலன்பெறுவோருக்கு செலுத்தப்பட வேண்டுமெனினும் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) செயற்திட்டம் அமைச்சின் நேரடி கண்காணிப்புக்கு ஆளாக்கி பௌதீக முன்னேற்றத்தை பரிசோதனை செய்திருக்கவில்லை.

(ஈ) **அபிவிருத்தி விடயங்களுக்கு வேறு நிறுவனங்களுக்கு நிதியேற்பாடுகள் வழங்குதல்**

2015 ஆண்டின் போது அமைச்சின் அபிவிருத்தி பிரேரணைகளை செயற்படுத்துவதற்காக மாவட்ட செயலகங்கள் மற்றும் கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்திற்கு ரூபா 96.57 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதே போல் தேசிய நீர் வாழ் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்திற்கு முற்பணமாக ரூபா 1.54 மில்லியன் ஆக மொத்தம் ரூபா 98.11 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இந்த நிதியேற்பாடுகளின் மூலம் ரூபா 55.08 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாடுகளை பயன்படுத்துவது தொடர்பாக போதியளவு தொடர் செயல்நடவடிக்கை எடுத்திருக்காததுடன் வழங்கியிருந்த பண்டங்கள் மற்றும் சேவை பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதே போல் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்காத மூன்று சந்தர்ப்பங்கள் மற்றும் குறைவான பௌதீக முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்கள் காணப்பட்டது.

## 3.11 செயலாற்றுகை

2015 வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) அமைச்சின் 2013-2016 ஆண்டுகளுக்கான இடைக்கால கொள்கைச் சட்டகத்தில் அடங்கியுள்ள முக்கிய கருமம் ஒன்றான அரசுக்கு சொந்தமான கடற்தொழில் வள்ளங்களை கண்காணித்தல் மற்றும் முகாமைப்படுத்துவதற்கான திட்டங்கள், செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தி அல்லது பாதீட்டின் மூலம் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டோ இருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது இலங்கை மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி வருமானம் முன்னைய ஆண்டுடன் சார்பிலான ரூபா 10,082 மில்லியனினால் அதாவது 29 சதவீதத்தினால் குறைந்திருந்தது. ஏற்றுமதி செலவுகள் முன்னைய ஆண்டுடன் சார்பிலான ரூபா 11,860 மில்லியனால் அதாவது 63 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இதன் காரணமாக தேறிய வெளிநாட்டு செலாவணி உழைத்தல் ரூபா 6,013 மில்லியனான மறைப் பெறுமானத்திற்கு மாறியிருந்தது. அது முன்னைய ஆண்டுகள் சார்பிலான 62 சதவீத வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. மேலும் ஏற்றுமதி கேள்விகளுக்கான கடற்தொழில் துறையின் பங்களிப்பு முன்னைய ஆண்டின் போது 2.4 சதவீதமாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அது 1.8 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. அந்த நிலைமையில் மீளாய்வாண்டின் மீன் ஏற்றுமதி மூலம் வெளிநாட்டு நாணயம் உழைத்தல் என்ற அமைச்சின் குறிக்கோள்களை அடைவதில் முன்னேற்றத்தினைக் காட்டியிருக்கவில்லை.

(ii) முன்னைய ஆண்டின் போது 535,050 மெற்றிக் தொன்னாக காணப்பட்ட தேசிய மீன் உற்பத்தி மீளாய்வாண்டின் போது 520,190 மெற்றிக் தொன் வரையும் 14,860 மெற்றிக் தொன்கள் அதாவது 2.7 சதவீதம் வரை குறைந்திருந்தது. மொத்தத் தேசிய உற்பத்திக்காக கடற்தொழில் துறையில் பங்களிப்பு நிலையான விலையின் படியான (2010 அடிப்படையில்) 2014 ஆண்டின் போது ரூபா 120,657 மில்லியன் ஆகியிருந்தது. அது 2015 ஆண்டின் போது ரூபா 117,453 தொகை என ரூபா 3,204 மில்லியனால் அதாவது 2.7 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்திருந்தது. இங்கு 25.76 கி.கிராம் ஆகிய தனி நபருக்கான உள்நாட்டு மீன் உற்பத்தியும்

மீளாய்வாண்டின் போது 24.81 கிலோகிராம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் காரணமாக மீன் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் மக்களின் போஷாக்கு நிலைமை மற்றும் உணவுப் பாதுகாப்புத் தன்மையினை அதிகரிக்கும் அமைச்சின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கான மீளாய்வாண்டின் போது முன்னேற்றமொன்று காணப்பட்டிருக்கவில்லை.

**(இ) திட்டமிடல்**

2015 ஆண்டின் போது அமைச்சின் செயற்பாடுகளை திட்டமிடல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆண்டிற்கான அமைச்சின் பாதீட்டில் அடங்கியுள்ள ரூபா 2,446 மில்லியன் தொகையான 10 செயற்திட்டங்கள் அதனது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 135 மில்லியனுக்கான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 4 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தியிருக்க வில்லை.

(iii) கடற்தொழில் பிரஜைகளை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் காணப்பட்ட 09 செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி செயலாற்றுகை 20 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான வீச்சளவினைக் கொண்டிருந்தது.

**3.12 வங்கிக் கணக்குகள் நெறிப்படுத்துவதில் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றுக்கள் தயாரிப்பதில் நீண்ட தாமதம்**

03 வங்கிக் கணக்குகள் தொடர்பான வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிப்பதில் நீண்ட தாமதமொன்று காணப்பட்டது.

**(ஆ) செயற்படாத வங்கிக் கணக்குகள்**

அமைச்சினால் பேணப்பட்டு வந்த 21 வங்கி நடைமுறைக் கணக்குகள் 01 வருடம் முதல் 06 வருடம் வரையும் காலவீச்சில் இருந்து செயற்படாது காணப்பட்டது. அவற்றில் 04 கணக்குகள் தொடர்பாக விளைவற்றுக் காணப்பட்ட மீதி ரூபா 4,785,975 தொகையாகக் காணப்பட்டது.

**3.13 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையுள்ளவையாக இருந்தது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அமைச்சின் பாவணைக்கு உதவாத தன்மையுள்ள 10 வாகனங்களை அகற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 மார்ச் 31 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்கம் கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் அகற்றப்பட வேண்டுமென விதந்தரைக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பாக விபரங்கள் குறிப்பிட்ட படிவத்தில் நிரப்பி 2015 ஏப்ரல் 10 ஆந் திகதிக்கு முன்னர் பொது நிதித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) 2015 ஜுலை 10 திகதிய 2/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அகற்றப்படும் வாகனங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக மோட்டார் போக்குவரத்து திணைக்கத்தின் மோட்டார் வாகன பரிசோதகர் ஒருவர் உட்பட

பெறுமதி மதிப்பீட்டு சபை ஒன்று நியமனம் செய்ய வேண்டியிருந்தது. எனினும் 10 வாகனங்களை அகற்றுவதற்காக ஓடோமொபயில் கம்பனிக்கு அனுப்பி பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றிருந்த போதிலும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுமதி மதிப்பீட்டு சபை ஒன்று நியமனம் செய்திருக்கவில்லை. அதே போல் சுற்றறிக்கையின் மூலம் விதித்துள்ளவாறு குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் அகற்றுதல் விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்காததுடன் 2015 ஜூலை 30 திகதிக்கு முன்னர் அகற்றுதல் தொடர்பான தகவல்கள் பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.14 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறை சார்ந்ததாகக் காணப்படவில்லை. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அரச பெறுகைகள் வழிகாட்டல் செயற்பாடுகளில் இருந்து விளகல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கடற்றொழில் சங்கங்கள் மற்றும் கடற்றொழிலாளருக்கு தரையிறக்கும் துணைக் கருவி, மீன்களைக் களஞ்சியப்படுத்தும் பெட்டிகள் மற்றும் மீன்களை பொதி செய்யும் பெட்டிகள் வழங்கல்கள்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கடற்றொழில் துறைமுகங்களுக்கு அண்மையில் தரையிறக்கும் வசதிகள், தேகாரோக்கிய மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு நிலையங்களை மேம்படுத்துதல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடற்தொழிலாளர் சங்கங்கள் மற்றும் கடற்தொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் உற்பத்தி செய்து வழங்குவதற்காக ரூபா 35,950,900 தொகைக்கான ஒப்பந்த வேலை அரச கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ் ஒப்பந்த வேலையை வழங்கும் போது அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2:2:1 மற்றும் 2:.4:1 வழிகாட்டலின் பிரகாரம் போட்டி அடிப்படையில் விலைகூறல் அழைக்கப்பட்டிருக்கவில்லை. அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையில் 3:5:1 (இ) வழிகாட்டலுக்கு முரணாக குறிப்பிட்ட அரச கம்பனிக்கு நேரடி ஒப்பந்த வேலை ஒன்றாக ஒப்படைப்பதற்காக 2015 நவம்பர் 23 ஆந் திகதி பெறுகைகள் குழு செயற்பட்டிருந்தது.

(ii) இந்த ஒப்பந்த வேலைக்காக செயலாற்றுகை முறி ஒன்று பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 2015 திசெம்பர் 31 திகதி வரை மீன்களைத் தரையிறக்கும் சுமார் 200 துணைக் கருவிகள் உற்பத்தி செய்திருந்தது. மீன்களை களஞ்சியப்படுத்தும் 25 பெட்டிகள், மீன்களை பொதி செய்யும் 125 பெட்டிகள், மீன்களைத் தரையிறக்கும் 30 துணைக் கருவிகள் வழங்குதல் தொடர்பாக ரூபா 11.88 மில்லியன் 2015 திசெம்பர் 31 திகதி செலவுக் கணக்கில் கணக்கீடு செய்து எழுதியிருந்த காசோலை வங்கிக்கு சமர்ப்பிக்காமல் கையில் தடுத்து வைத்து 2016 ஆகஸ்ட் 12 திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) இச் செயற்திட்டம் ஐரோப்பிய சங்க பிரதி நிதிகளின் அவதானிப்புக்குள்ளாகிய கடற்தொழில் துறைமுகங்களுக்கான உபகரணங்களை வழங்குவதற்காக தீவிர பெறுகைகள் என செயற்பட்டிருந்த போதிலும் அக் காலப்பகுதியில் மீன்களைத் தரையிறக்கும் 100 துணைக் கருவிகள் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

(v) குறிப்பிட்ட உபகரணங்கள் கடற்தொழிலார்களுக்கு அல்லது கடற்தொழில் சங்கங்களுக்கு ஒப்படைக்கப்பட்டதற்கான, ஒப்படைக்கப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்தப்படுவதாகவும் கணக்காய்வுத் திகதி ஜூலை 15 திகதி வரை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. இதன் காரணமாக செயற்திட்டத்தின் மூலம் எதிர்ப்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வள்ளங்களை நுண் பரிசோதனை செய்யும் முறைமை ஒன்று அமைத்தல்**

---

சர்வதேச கடலில் கடற்றொழில் மேற்கொள்ளும் வள்ளங்களுக்காக வள்ள நுண் பரிசோதனை முறைமை ஒன்று நிறுவுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) குறிப்பிட்ட வள்ளங்கள் நுண் பரிசோதனை மேற்கொள்ளும் முறைமையை நிறுவுதற்காக ஆரம்ப ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு அல்லது செலவு மதிப்பீடு ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) வள்ளங்களை நுண் பரிசோதனை செய்யும் முறைமையினை நிறுவுவதற்காக அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.7 இன் பிரகாரம் பெறுகைகள் குழு ஒன்று நியமனம் செய்திருக்கவில்லை.

(iii) வழங்குனரை தெரிவு செய்யும் போது அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 3.1.4 இன் பிரகாரம் உச்ச அளவிலான போட்டியொன்றினை ஒன்றினை ஏற்படுத்துவதற்காக பெறுகைகள் அறிவித்தலுக்காக சர்வதேச விளம்பரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 22 கம்பனிகளினால் தன்னிச்சையாக சமர்ப்பித்திருந்த பிரேரணைகளை மதிப்பாய்வு செய்த பின்னர் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(iv) 2010 ஆகஸ்ட் 04 ஆம் திகதிய 444 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் சமர்ப்பித்திருந்த பிரேரணைகள் பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(v) சுய விருப்ப பிரேரணைகளை மதிப்பாய்வு செய்தல் தொடர்பான தொழில்நுட்ப அறிவு மற்றும் அனுபவமுள்ள குழு ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் தெரிவு செய்யப்பட்ட கம்பனிகளில் நேரடி காட்சிப்படுத்தல் மதிப்பீடுகளும் தகைமையுடைய நபர்களை கொண்ட தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) நேரடி காட்சிகளின் பின்னர் தெரிவு செய்யப்பட்டிருந்த வழங்குனர்களின் தொழில்நுட்ப மற்றும் நிதி பிரேரணைகளுக்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருந்தது என குறிப்பிட்டு அமைச்சரவை பத்திரம் ஒன்று சமர்ப்பித்திருந்த போதிலும் அதற்காக அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை.

(vii) தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் செயற்திட்டம் தொடர்பான உடன்படிக்கை கையொப்பம் இடுவதற்கு முன்னர் தகவல் தொழில்நுட்ப வல்லுனர் ஒருவர் மூலம் செயற்திட்டத்தின் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், பின் விற்பனைக் கிரயத்தை

தீர்மானித்து உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அனுமதிப்பத்திரக் கிரயம் 10 வருடங்களின் விலைத் தளம்பலைக் கவனத்தில் எடுத்து தீர்மானிக்க வேண்டும் எனவும் செயற்திட்ட கிரயம் சர்வதேச கூறுவிலைகளை கவனத்தில் எடுத்து நிபுனத்துக் குழு ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனினும் விதந்துரைக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த விதந்துரைகளை செயற்படுத்தியிருக்கவில்லை.

(viii) 2011 திசெம்பர் 15 திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் வள்ளங்களை நுண் பரிசோதனை செய்யும் முறைமையினை நிறுவுவதற்கு அமைச்சரவையினால் நியமிக்கப்படும் கலந்துரையாடல் இணக்கக் குழு ஒன்று மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு ஒன்று நியமனம் செய்யும் படி விதிக்கப்பட்டிருந்த போதிலும், தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) வழங்குனரைத் தெரிவு செய்யும் போது செயற்திட்டத்தின் கிரயம் தொடர்பாக எதுவித குறிப்புகளும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் தெரிவு செய்யப்பட்ட பின்னர் சுயமான பிரேரணை ஒன்றாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை வழங்குனரினால் 2 சந்தர்ப்பங்களில் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(x) அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட கலந்துரையாடல் இணக்கக் குழு வழங்குனருடன் கலந்துரையாடி 1.6 சதவீதத்தினால் செயற்திட்டத்தின் ஒட்டு மொத்த கிரயத்தை குறைப்பதற்கு இணங்க வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் 6,510,000 யூரோக்களுக்கு வெளி நிறுவனம் ஒன்றில் இருந்து கொள்வனவு செய்து பொறுத்தப்படும் தொடர்பாடல் தொகுதிகளின் போட்டி சந்தைவிலை நேரடியாகவே பெற்றுக்கொள்வதற்காக குழுவினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக அவற்றின் விலையை 60,000 யூரோக்களினால் மாத்திரம் குறைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிரேரணையில் அடங்கியுள்ள விடயம் 3 அகற்றுதல், பராமரிப்பு கிரயம் உட்பட எதிர்வரும் கொடுப்பனவுகளுக்காக மேலதிகமாக கொடுப்பனவு ஒன்று உட்படுத்துதல், விடயம் 2 விலைகளை அதிகரித்தல் ஆகிய காரணங்களினாலே குழுவினால் அரசுக்கு உச்ச மட்ட அனுகூலங்களாகும் விதமாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டது.

(xi) வள்ளங்களை நுண் பரிசோதனை செய்யும் முறைமையினை நிறுவும் போது கடைபிடிக்கப்பட்டிருந்த முறைசாரா பெறுகைகள் செயற்பாட்டின் காரணமாக செயற்திட்டத்தை ஆரம்பித்தல் 03 வருடங்கள் தாமதமாகியதன் காரணமாக விலைகள் அதிகரித்த காரணத்தினால் யூரோ 1.7 மில்லியனுக்காக நேரடி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. வள்ளங்கள் நுண் பரிசோதனை செய்யும் முறைமை நிறுவுவதற்கு தாமதம் ஏற்பட்டதினால் ஐரோப்பிய மீன் தடையின் காரணமாக ஏற்றுமதி வருமானம் குறைந்ததினாலும் இலங்கைக்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

(xii) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகைகள் செயற்பாடுகள் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. விலைகூறல் காரர்களின் முன்னைய தகைமைகளை பரிசோதனை செய்தல், பாதுகாப்பு பிணை பெற்றுக்கொள்ளல், விலைகூறல்தாரர்களின் பின் தகைமை பரிசோதனை செய்தல் மற்றும் ஒப்பந்தம் வழங்கள் ஆகிய விடயங்கள் இந்த பெறுகைகளில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. பெறுகைகள் குழு ஒன்று நியமனம் செய்து பகிரங்கமாக கூறுவிலைகள் கோரப்பட்டு பெறுகைகள் நடைமுறையினரின் செயற்படுத்துவதற்கு பதிலாக சுயவிருப்ப பிரேரணை ஒன்றினை ஏற்றுக்கொள்ளப்பட்டமை காரணமாக மிகைச் செலவு ஒன்று ஏற்பட்டுள்ளது.

**(ஆ) உடல் நல நிலையத்திற்காக உடற்பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்தல்**

-----------------------------------------------------------------------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சின் வளவில் ரூபா 14,458,000 தொகை செலவிடப்பட்டு புதிய உடல் வளர்ச்சி உபகரணங்களுடனான உடல்நல மத்திய நிலையத்தை நிறுவுவதற்காக உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆரம்ப கிரய மதிப்பீடு தயாரிக்காமை, போதியவான எண்ணிக்கையான வழங்குனர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படாமை, கூறுவிலைகள் சமர்ப்பிப்பதற்காக போதியளவு கால அவகாசம் வழங்கியிருக்காமை, விலைமனுதாரர்களும் விலைமனு திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்குபற்றுவதற்காக சந்தர்ப்பம் வழங்கியிருக்காமை ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ii) உடற்பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது பொறியியல் கருமங்கள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகத்தின் விதப்புரைகளுக்கு முரணாக விலை கூடிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமையால் சுமார் ரூபா 670,000 நிதிசார் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(iii) இந்த உடற்பயிற்சி உபகரணங்களை பொருட் பதிவேட்டில் பதிவு செய்து உத்தியோகத்தர் ஒருவரின் பொறுப்பில் சாட்டப்பட்டிருக்காததுடன் முறைப்படி சேவை நடத்துதல் மற்றும் பராமரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**(இ) அடித்தளத்தில் விரிக்கும் வலை வீசும் தொழிலுக்குப் பதிலாக மாற்று வலை உபகரணங்கள் வழங்குதல்**

-----------------------------------------------------------------------------------------------------------------

சம்பிரதாய முறையான அடித்தளத்தில் விரிக்கும் வலைகளை பயன்படுத்துவதன் காரணமாக நீண்டு நீடிக்கும் மீன் முகாமைத்துவத்திற்கு சேதமேற்பட்டுள்ளது. அவ்வாறான வலைகள் உபகரண பாவனையை குறைத்து கடற்தொழிலாளர்களை மிகவும் ஆக்கபூர்வமான மற்றும் திறமையான சுற்றாடலுக்கு அனுகூலமான தொழிநுட்பம்சார் செயல்முறை ஒன்றிற்கு திரும்ப வேண்டியிருந்தது. இதற்காக அடித்தளத்தில் விரிக்கும் வலைத் தொழிலை நிறுத்துவதற்காக குருநகர் பகுதியில் 158 கடற்தொழிலாளர்களுக்கு 20 கடற்தொழில் வலை பீஸ்களும், 600 போயாக்களும், 3 கிலோ டுவயின் நூலும் மற்றும் 01 பைபர் மீன்பெட்டியும் அடங்கிய 158 கடற்தொழில் உபகரணத் தொகுதிகளை வழங்குவதற்கு விதப்புரை வழங்கப்பட்டிருந்தது.

இந்த முதல் கட்டத்தின் கீழ் ஒருவருக்கு 05 வலை பீஸ்கள் வீதம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு 790 வலை பீஸ்கள் உற்பத்தி செய்து வழங்குவதற்காக அரச கம்பனி ஒன்றிற்கு ரூபா 16.84 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் இலக்கம் 2:2:1 மற்றும் 2:4:1 போட்டித் தன்மையுடைய விலைகோறல் பெற்றுக்கொள்வதன் மூலம் வழங்குனர்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 7:8:4 இன் பிரகாரம் விலைகோறல் அழைக்கும் போது, விலைகோறல் முறி ஒன்றினைப் பெற்றிருக்கவில்லை. ஒப்பந்த வேலை வழங்கப்படும் போது

அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் இலக்கம் 5:4:10 வழிகாட்டலின் பிரகாரம் செயலாற்றுகை முறி ஒன்று பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவினால் வழங்குனர்களை தெரிவு செய்யும் போது ஒப்பந்த கம்பனி கடற்தொழில் உபகரணங்களை வழங்குவதில் நீண்ட காலமாக பெற்றிருந்த அனுபவம் மற்றும் பண்டங்களின் தரம் மற்றும் விஷேடமாக வலை உபகரணங்கள் நீடித்த பாவணை பயன்டுத்திய மூலப் பொருட்களின் மாதிரிகளும், அரச நிறுவனம் என்ற வகையில் காட்ட வேண்டிய பொறுப்பு என்பவற்றின் மீது கவனம் செலுத்தியிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட கம்பனி கடற்தொழில் வலைகளை வேறு வழங்குனர்களிடம் கொள்வனவு செய்து வழங்கப்படுவதாக பொது முகாமையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(iv) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8:9:1 இன் படி அமைச்சினால் வழங்குனருடன் முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. உபரகணங்கள் வழங்குவதில் 93 நாாட்கள் கால தாமதம் காணப்பட்ட போதிலும் அந்த தாமதக் காலம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு இயலாதிருந்தது.

(v) வழங்குனர் கடற்தொழில் வலை அலகு ஒன்றிற்காக 2014 ஜுலை 28 ஆந் திகதி சமர்ப்பித்திருந்த ரூபா 19,384 இற்கான விலை 2014 செப்தெம்பர் 24 திகதி ரூபா 21,322 தொகையொன்று திருத்தப்பட்டிருந்தது. இதன்படி அலகு ஒன்றின் விலை ரூபா 1,938 இனால் அதிகரித்திருந்த போதிலும் அவை தொடர்பாக கவனம் செலுத்தாமல் ரூபா 21,323 இற்கான விலையை ஏற்றுக்கொள்வதற்காக பெறுகைகள் குழு செயற்பட்டமையால் ரூபா 1,531,532 தொகையொன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(vi) 158 நலன்பெறுவோரில் இருந்து கடற்தொழிலாளர்கள் 100 பேருக்கு வலைத் தொகுதிகள் வழங்கப்பட்டதென பெயர் பட்டியல் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கடற்தொழிலாளர் 58 பேருக்கு வலைகள் வினியோக்கிக்கப்பட்டதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) அடித்தளத்தில் விரிக்கும் வலை தொழிலை நிறுத்துவதற்காக கடற்தொழிலாளர்களினால் 20 வலைகளைக் கொண்ட கடற்தொழில் உபகரணத் தொகுதிகளை வழங்கும் படி விண்ணப்பித்து அதனை விதந்துரைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவர்களுக்கு 5 வலைத் தொகுதிகள் மாத்திரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் தேவையான ஏனைய உபகரணங்கள் ஏதும் கடற்தொழிலாளருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்தினால் எதிர்ப்பார்த்தவாறு கடற்தொழிலாளர்களினால் அடித்தளத்தில் விரிக்கும் வலைத்தொழிலை நிறுத்தி சுற்றாடலுக்கு அனுகூலமான தொழிநுட்பம் சார் செயல்முறை ஒன்றிற்கு கவனம் செலுத்துவதற்கு தொழில்நுட்பம் சார் ஒத்துழைப்பு வழங்கும் இலக்கினை நிறைவேற்றியிருக்கவில்லை.

### 3.15 இழப்புகளும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட இழப்புகள் மற்றும் சேதங்கள் பற்றிய அவதானிப்புக்கள் கீழ்வருமாறு.

(அ) கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சினால் கொள்வனவு செய்திருந்த ஜீப் வண்டி ஒன்று துறைமுகத்திற்கு வரும் போதே அதனை விடுவிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை வழங்குவதற்கு அமைச்சினால்

தாமதிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக வாகனத்தை விடுவிக்கும் போது தாமதக் கட்டணமாக ரூபா 149,161 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. பெறுகைகள் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்களின் கட்டணத்தை மிகைத்து செலுத்தப்பட்டிருந்த ரூபா 149,161 இற்கான தொகை அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்ட கொடுப்பனவு ஒன்றென அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 20 ஆந் திகதி விபத்து ஒன்றிற்கு உள்ளாகிய அமைச்சுக்குச் சொந்தமான வாகனம் ஒன்று தொடர்பாக 2016 ஆகஸ்ட் 15 திகதி வரை நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2012 திசெம்பர் 26 ஆந் திகதிய அமைச்சுக்கு சொந்தமான வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியமையால் ரூபா 939,173 இற்கான நட்டம் மற்றும் வேறு ஒரு வாகனம் 2013 ஆகஸ்ட் 11 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியமையால் ரூபா 512,080 இற்கான நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.16 முகாமைத்துவப் பலவீனங்கள்

தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) தொழிநுட்ப உதவியாளர் பதவிக்காக ஆள் சேர்த்தல்**

அமைச்சின் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்காக ஒரு நபர் ஆட்சேர்க்கப்படும் போது, ஆட்சேர்ப்பு நடைமுறையின் 7.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்த கிரய விளம்பரம் ஊடாக ஒன்றினைத் தெரிவு செய்வதற்காக 03 செய்தித்தாள்களில் விளம்பரம் பிரசுரிப்பதற்காக ரூபா 324,072 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஆட்சேர்க்கும் போது பதவிக்குப் பொருத்தமான தொழில்சார் தகைமையாகிய NVQ 5 நிலையினைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் எழுத்துமூலம் பரீட்சை நடத்தப்பட வேண்டுமெனினும் ரூபா 324,284 தொகை செலவிடப்பட்டு அனைத்து விண்ணப்பதாரிகளும் எழுத்துமூலம் பரீட்சைக்கு தொடர்புபடுத்தப்பட்டனர். எழுத்துமூலம் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 05 அங்கத்தவர்களும் குறிப்பிட்ட தொழிற்சார் தகைமை பூர்த்தி செய்திருக்கவில்லை. அத்துடன் 2016 ஏப்ரல் 30 திகதி வரை அப் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. அதன் படி ஆட்சேர்ப்புக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 648,356 தொகையான செலவு பலனற்றதாக மாறியிருந்தது.

**(ஆ) பணிப்பாளர் (அபிவிருத்தி மற்றும் கடல் வளங்கள்) பதவிக்காக பதில் கடமைக்காக நியமனம் செய்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011 ஒக்தோபர் 13 திகதி முதல் வெற்றிடமாகக் காணப்பட்ட பணிப்பாளர் (அபிவிருத்தி மற்றும் கடல் வளங்கள்) பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பதில் கடமையாற்றுவதற்கு தேவையான தகைமையுடைய உத்தியோகத்தர்கள் அமைச்சில் காணப்படும் போது திட்டமிடல் சேவையில் தரம் III சேர்ந்த அலுவலர் ஒருவரை இடமாற்றத்தில் பெற்று குறிப்பிட்ட பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக முழு நேர அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 06/97 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் படி பதவி ஒன்றில் பதில் கடமையாற்றும் உச்சகால எல்லை 03 மாதங்களாகும். எனினும் அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக குறிப்பிட்ட பெண் உத்தியோகத்தர் 2015 ஒக்தோபர் 01 திகதி வரை 03 வருடங்களுக்காக பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர்.

(iii) நன்நீர் கடற்றொழில் அபிவிருத்தியுடன் தொடர்புடைய 2015 ஆகஸ்ட் 20 திகதி சீனாவில் நடைபெற்ற பயிற்சி பாடநெறி ஒன்றிற்காக கடற்தொழில் துறையில் திணைக்கள பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரை பங்குபற்ற வைப்பதற்குப் பதிலாக திட்டமிடல் சேவையை சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் பங்குபற்றியிருந்தார். பயிற்சி முடிவடைந்த 03 மாதங்களின் பின்னர் குறிப்பிட்ட பெண் உத்தியோகத்தர் வேறு நிறுவனம் ஒன்றிற்கு மாற்றம் பெற்றுச் சென்றமையால் 955 அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டு வழங்கியிருந்த கடற்றொழில் துறையைச் சேர்ந்த பயிற்சியின் மூலம் அமைச்சு சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு தவறியிருந்தது.

**3.17 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி யினர் | உள்ளபடியான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக ்கை | மிகைகளின் எண்ணிக் கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 21 | 20 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | - | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 116 | 83 | 33 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 54 | 45 | 09 | - |
| (v) | ஏனைய(ஒப்பந்த/அமைய/ தற்காலிக) | 04 | 04 | 02 | 02 |
| | **மொத்தம்** | **200** | **152** | **50** | **02** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டு இறுதியளவில் 50 வெற்றிடங்கள் காணப்பட்டன. 2015 ஆண்டிற்கான நிதி ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு தொடர்பாக அவ் வெற்றிடங்கள் காணப்படல் பாதிப்பினை ஏற்படுத்தியிருக்கவில்லை என்பதனால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மிகை மதிப்பீடு செய்திருந்தமை காரணமாக பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்தன என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.